2025 – ஜனவரி மாதம் 28– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 310/2019 c/w 309/2019*

*2025–ம் ஆண்டு ஜனவரி மாதம் 28– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய R W 2, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | R W 2, விக்ரம் |
| தகப்பனார் பெயர் | : | அன்பழகன் |
| ஊர் | : | இரும்பிகுறிச்சி |
| வட்டம் | : | செந்துறை |
| மாவட்டம் | : | அரியலூர் |
| தொழில் | : | ஓட்டுநர் |
| வயது | : | 34 |

**தேதி: 28.01.2025.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது இரும்பிகுறிச்சியில் குடியிருந்து ஓட்டுநராக தொழில் செய்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். கடந்த 19.03.2019 அன்று நான் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றேன். என்னுடன் இருசக்கர வாகனத்தில் வீரதுரை, மைனர் மணிகண்டன் ஆகியோர்கள் எனக்கு பின்னால் அமர்ந்து பயணம் செய்தார்கள். விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்திற்கு எதிரே பேருந்து வந்தது. இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. விபத்து குறித்து நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை.

**குறுக்கு விசாரணை:– ( மனுதாரர் தரப்பில்)**

விபத்து நடந்த நேரம் இரவு 09.30 மணிக்கு நடந்தது என்றால் சரிதான். நான் சாலையில் இடதுபுற ஓரமாக சென்றுகொண்டிருந்தேன். நான் தலைகவசம் அணிந்திருந்தேன். என்னுடைய ஓட்டுநர் உரிமத்தை மோட்டார் வாகன

ஆய்விற்கு செல்லும்போது காண்பித்தேன். சாலையின் இடதுபுறம் தான் விபத்து ஏற்பட்டது. பேருந்து வலதுபுறமாக ஏறி வந்து விபத்து ஏற்பட்டது. பேருந்தின் வலது முன்பக்கம் ஓட்டுநர் இருக்கைக்கு கீழ் பகுதி எங்கள் இருசக்கர வாகனத்தின் மீது மோதியதால் நானும் மைனர் மணிகண்டனும் இடதுபுறம் விழுந்துவிட்டோம் என்றால் சரிதான். வீரதுரை மட்டும் பேருந்தின் மையப்பகுதிக்கு வலதுபுறமாக விழுந்துவிட்டார். பேருந்தின் வலதுபுற முன்சக்கரம் வீரதுரையின் இரண்டு கால்களிலும் ஏறி இறங்கிவிட்டது. எங்களுக்கு பேருந்தில் வந்த பயணியர்கள் உதவி செய்தனர். பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துநரும் ஓடி விட்டார்கள். விபத்திற்கு முழு பொறுப்பும் பேருந்தின் ஓட்டுநரின் அஜாக்கிரதையும் கவனக்குறைவும் தான் காரணம் ஆகும். பேருந்தின் ஓட்டுநர் விபத்திற்கு பின்னிட்டும் எந்தவித புகாரும் கொடுக்கவில்லை. வீரதுரை என்பவர் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்றுக் கொண்டு திருச்சி அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சை பெற்றுக் கொண்டு அங்கிருந்து மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு அங்கு வலது கால் தொடைக்கு கீழ் அகற்றப்பட்டு மற்றொரு காலையும் அகற்றுவதற்கு போதுமான இரத்தம் ஓட்டம் இல்லாததால் அறுவை சிகிச்சை செய்யாமல் இருந்து இரண்டு கால்களின் சதைகள் அழுகி சிதைந்து பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கு துர்நாற்றம் அதிகமாக இருந்ததால் வீட்டில் வைத்து அழுகிய சதை சுத்தம் செய்யப்பட்டது. அந்த நேரத்தில் அவர் இறந்துவிட்டார். துர்நாற்றம் அதிகமாக இருந்ததால் பிரேத பரிசோதனைக்கு அழைத்துவர முடியவில்லை. அவரது உடல் மோசமாக இருந்ததால் உறவினர்கள் அனைவருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு உடன் இருந்தார்கள். இறந்த 2 மணி நேரத்திலேயே அவரது உடலை மயானத்தில் அடக்கம் செய்தார்கள். நான் அங்கு இருந்தேன். விபத்து குறித்து முழு விபரமும் எனக்கு தெரியும் எனக்கு ஏற்பட்ட காயம் லேசான காயம் என்பதால் எந்தவித

இழப்பீடும் கோரி நான் மனு தாக்கல் செய்யவில்லை. நான் 5 நாள்கள் மட்டும் தான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். மைனர் மணிகண்டனிற்கு பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் காலில் ஏற்பட்ட காயத்திற்கு அறுவை சிகிச்சை செய்யபட்ட விபரம் எனக்கு தெரியும். பேருந்தின் ஓட்டுநர் விபத்திற்கு பின்னிட்டு இறந்த விபரம் எனக்கு தெரியும்.

**எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்க கேட்டு அனுமதி வழங்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

விபத்து சமயத்தில் நான் மூன்று நபர்களுடன் இருசக்கர வாகனத்தில் பயணித்து தடுமாறி ஓட்ட முடியாமல் பேருந்தின் வலதுபக்கம் மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல. விபத்து நடுரோட்டில் நடந்தது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:- இல்லை.**

**ஒப்பம் /- சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**